மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 148 /2016**

தேதி : 28.03.2022

பெயர்: கலியமூர்த்தி (PW1)

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>** 28.03.2022

சாட்சி அனுமதியின்பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

05.12.2019 தேதியிட்ட இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி புஷ்பவள்ளிக்கு எதிராக தாவாச்சொத்தை பொறுத்து மாண்புமிகு மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றததில் நான் தாக்கல்செய்த இடைமனு எண்.85/2018 (அசல் வழக்கு எண்.157/2016) என்ற மனுவின் முதல்நிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.01.2018 தேதியிட்ட மேற்படி அசல்வழக்கு எண்.157/2016 ன் முதன்சார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்ட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி இரண்டு ஆவணங்களும் மூன்றாம் பிரதிவாதி தரப்பில் மூன்றாம் பிரதிவாதியின் மேற்பை அசல் வழக்குஎண்.157/2016 ல் தரப்பினராக சேர்க்கவில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**